புரட்சிப்
# பெரியார் முழக்கம்
www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • ஜுலை (JULY) 02, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 27 • விலை(PRICE) ரூ.6.00

★ அதிகாரத்தில் கால் பதிக்காத குரலற்ற சமூகங்களின் உரிமைக்கு கருத்தரங்குகள்
★ குடும்ப விழாக்கள் ★ மாற்றத்துக்கான வாழ்வியல் பரப்புரைப் பயணம்

# கழகத் தலைமைக் குழு முடிவுகள்



திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமைக் குழு கூட்டம் 28.06.2026 ஞாயிறு பிற்பகல் 2.30 மணி அளவில் திருப்பூரில் கழகப் பொருளாளர் துரைசாமி அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது.

தலைமைக் குழுக் கூட்டத்திற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலை வகித்தார்.

தலைமைக் குழுக் கூட்டத்தில் கழகத்தின் அடுத்த கட்ட செயல் திட்டங்கள், பரப்புரைப் பயணம், கருத்தரங்குகள் நடத்துவது, குடும்ப விழாக்கள் நடத்துவது ஆகியவை குறித்து விவாதித்து முடிவுகள் எடுக்கப்பட்டன.

நிறைவாக தலைமைக் குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

### 1. "குரலற்ற மனிதர்களுக்கான குரல்"

சீர்மரபினர் (DNC/DNT) என்று பட்டியலிடப்பட்டுள்ள ஜாதிகளில் இன்று வரை அரசியல் அதிகாரமோ, அரசுப் பதவிகளையோ பெறும் வாய்ப்பே கிட்டாமல் அமிழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கும் சமூகத்து மக்களின் பாடுகளை பொதுச் சமூகத்தின் பார்வைக்கு கொண்டு வந்து அவர்களுக்கான உரிமைகளுக்காய் குரல் கொடுக்கும் நோக்கத்துடன் "குரலற்ற மக்களின் குரலாக" ஒலிக்கும் வகையில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கருத்தரங்குகளை நடத்தி அரசின் கவனத்திற்கும் பொதுச் சமூகத்தின் கவனத்திற்கும் கொண்டு செல்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

### 2. பரப்புரை பயணத் திட்டம்.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 14-ம் ஆண்டு பரப்புரைப் பயணத்தை தென் மாவட்டங்களில் முன்னெடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. அந்த வகையில் பரப்புரைப் பயணம் 2026 ஆகஸ்டு 6-ம் தேதி திருச்சி, பேராவூரணி, நாகர்கோயில் ஆகிய 3 முனைகளில் இருந்து தொடங்கி கழகம் தொடங்கிய நாளான ஆகஸ்ட் 12-ஆம் தேதி காரைக்குடியில் பயண நிறைவு மாநாடு நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

"சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு" என்கின்ற தந்தை பெரியாரின் கருத்தின் அடிப்படையில் இந்த பரப்புரைப் பயணம் அமைய உள்ளது.

ஒரே ஜாதி திருமணங்கள், மதத்தில் சமஸ்கிருதம், பார்ப்பனர்கள் திணிக்கும் இழிவுகள், குடும்பத்தில் அறிவியலுக்கு எதிரான மூடநம்பிக்கைகள் ஆகியவற்றிலிருந்து இளம் தலைமுறையினர் விடுவித்துக் கொண்டு அறிவியல் சமத்துவ வாழ்வியலுக்கான மாற்றம் நோக்கி நகர வேண்டும் என்ற நோக்கத்தில் இந்தப் பரப்புரை இயக்கத்தை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. இப்பயணத்தில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து கழகத் தோழர்கள் பங்கேற்று கலை நிகழ்ச்சிகள், துண்டறிக்கைகள், தெருமுனைக் கூட்டங்களாக இப்பரப்புரைப் பயணம் நடைபெறும்.

### 3. குடும்ப விழாக்கள்

தந்தை பெரியாரின் பிறந்த நாளான செப்டம்பர் -17 அன்று அந்தந்த மாவட்டக் கழகங்களின் சார்பில் கழகத் தோழர்களின் குடும்பங்கள் ஒன்றிணைந்து பங்கேற்கும் விழாக்களை நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. இவ்விழாக்களில் கலை நிகழ்ச்சிகள் சிறுவர், சிறுமியர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள் ஆகியவற்றின் மூலம் கழகக் குடும்பங்களை ஒருங்கிணைத்து உற்சாகப்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் துரைசாமி, அமைப்புச் செயலாளர் ஈரோடு ரத்தினசாமி, பரப்புரைச் செயலாளர் தூத்துக்குடி பால். பிரபாகரன், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், வெளியீட்டுச் செயலாளர் கோபி இராம.இளங்கோவன், தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி, சமூக ஊடகப் பொறுப்பாளர் பரிமளராசன், சென்னை உமாபதி, மேட்டூர் கோவிந்தராஜ், காவலாண்டியூர் ஈஸ்வரன், பேராவூரணி திருவேங்கடம், திருச்சி மனோகரன், கோவை நிர்மல் குமார், சூலூர் பன்னீர்செல்வம், வேலூர் சிவா ஆகிய தலைமைக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**பரப்புரைப் பயணத்துக்கான தலைப்பு**

- ஜாதியில் திருமணம்
- மதத்தில் பார்ப்பனியம்
- வாழ்வில் மூடநம்பிக்கை

**தடை, அதை உடை......**

**மாற்றத்தை நோக்கிய வாழ்வியல் பரப்புரைப் பயணம்**

## ‘உயர்ஜாதி’ ஏழை ஒதுக்கீட்டில் மோசடிகள்

ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (யு.பி.எஸ்.சி.) நடத்திய சிவில் சர்வீசஸ் தேர்வில், பொருளாதார நலிந்த பார்ப்பனர்களுக்கான (EWS) இட ஒதுக்கீட்டில் பெரும் முறைகேடுகள் நடந்திருப்பதாக வெளியாகி இருக்கும் தகவல்கள் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. இதுகுறித்து விரிவான விசாரணை ஆணையம் அமைக்க வேண்டும் என்று கல்வியாளர்கள் மத்தியில் கோரிக்கைகள் வலுத்து வருகின்றன.

ஒன்றிய அரசின் விதிமுறைப்படி, ஆண்டு வருமானம் 8 இலட்சம் ரூபாய்க்குக் குறைவாக உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கே 10% இட ஒதுக்கீட்டின் கீழ் சலுகைகள் வழங்கப்பட சட்டம் இருக்கிறது. ஆனால், அண்மையில் தேர்ச்சி பெற்ற உயர்ஜாதி ஏழைப் பிரிவைச் சேர்ந்த 104 மாணவர்களின் பின்னணி குறித்து ஆராய்ந்தபோது பல அதிர்ச்சி ஊட்டும் தகவல்கள் வெளி வந்துள்ளன. தேர்ச்சி பெற்ற 104 பேரில் 67 மாணவர்கள், ஆண்டுக்கு ரூ. 2.65 இலட்சம் வரை கட்டணம் வசூலிக்கும் நாட்டின் மிக புகழ்பெற்ற சிவில் சர்வீசஸ் பயிற்சி மய்யங்களில் படித்துத் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

46 மாணவர்கள் ஆண்டுக்கு ரூ.1 இலட்சம் வரை கட்டணம் வசூலிக்கும் தனியார் பள்ளிகளில் படித்தவர்கள் என்பதும், 14 மாணவர்கள் அய்.அய்.டி (IIT), என்.அய்.டி (NIT) போன்ற நாட்டின் உயர்தர கல்வி நிறுவனங்களில் பயின்றவர்கள் என்பதும் தெரிய வந்துள்ளது. தேர்ச்சி பெற்றவர்களில் 28 மாணவர்களின் பெற்றோர்கள் பெரிய தொழிலதிபர்களாகவும், நிறுவனங்களின் உரிமையாளர்களாகவும், சொந்தமாகப் பெரிய கடைகள் மற்றும் குடும்பத் தொழில் நடத்துபவர்களாகவும் உள்ளனர்.

10 மாணவர்கள் ஏற்கனவே பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளிட்ட முன்னணி தனியார் நிறுவனங்களில் நல்ல ஊதியத்துடன் பணி புரிந்தவர்கள் ஆவர்.

இலட்சக்கணக்கில் பள்ளிக் கட்டணம் செலுத்தியவர்களும், கோடிக்கணக்கில் வணிகம் செய்யும் தொழிலதிபர்களின் வாரிசுகளும், பன்னாட்டு நிறுவனங்களில் பணிபுரிந்தவர்களும் எப்படி ‘பொருளாதாரத்தில் நலிந்தவர்கள்’ என்ற வரம்புக்குள் வர முடியும் என கல்வியாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

உண்மையான ஏழை எளிய மாணவர்களின் வாய்ப்புகளைப் பறிக்கும் வகையில் நடைபெற்றுள்ள இந்த EWS மோசடி குறித்து ஒன்றிய அரசு உடனடியாகத் தலையிட்டு, ஒரு உயர்மட்ட விசாரணை ஆணையம் அமைத்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்களும் கல்வியாளர்களும் வலியுறுத்தியுள்ளனர்.

## காவல் நிலையத்தில் கிடா வெட்டுவதா?

**கழகம் புகார்; அரசு உடனடி நடவடிக்கை!**

*சேலம் தீவட்டிப்பட்டி காவல் நிலையத்தில் குற்றங்கள் குறைய வேண்டும் என்பதற்காக கிடாவெட்டி மாந்திரீக பூஜை போட்ட காவல்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி சேலம் மாவட்டக் கழகத்தின் சார்பில் 26.06.2026 அன்று புகார் மனு காவல் நிலையத்தில் அளிக்கப்பட்டது. மாவட்டக் காவல் துறை அதிகாரிகள் உடனே தலையிட்டு நடவடிக்கை எடுத்துள்ளனர். செய்தி விவரம்:*

கடந்த 20.06.2026 அன்று சேலம் மாவட்டம் தீவட்டிப்பட்டி காவல் நிலையத்தில் "குற்றங்கள் குறைய வேண்டும்" என்பதற்காக காவல்துறையினரே கிடாவை பலியிட்டு, அதன் ரத்தத்தை காவல் நிலைய கட்டிடத்தின் நான்கு மூலைகளிலும் பூசி, மாந்திரீக பூஜை நடத்தியுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அரசு ஆணைப்படி, அரசு அலுவலகங்கள், காவல் நிலையங்கள் உள்ளிட்ட அனைத்து அரசு கட்டிடங்களிலும் மதச்சார்புடைய வழிபாடுகள், பூஜைகள், கடவுள் படங்கள், மாந்திரீக சடங்குகள் நடத்துவது முற்றிலும்

தொடர்ச்சி 2ம் பக்கத்தில்

தலையங்கம்

## ‘சிட்டிசன்’ அடையாளம் ஏன் உறுத்துகிறது?

‘இந்தியாவின் குடிமகன்/குடிமகள்’ என்பதற்கான சான்றாகவே கடவுச்சீட்டு எனும் பாஸ்போர்ட் வழங்கப்பட்டு வந்தது. வெளியுறவுத் துறை அமைச்சகம் இப்போது அதை மறுக்கிறது; அது ஒரு பயண ஆவணம் தான் என்று கூறுகிறது. அதேபோல் ஆதார் அடையாளமும் குடிமகன் அல்லது குடிமகள் என்பதற்கான சான்று இல்லை என்றும் கூறுகிறது. இந்திய அரசியல் சட்டத்தின் கீழ் இந்த நாட்டில் வாழும் ஒவ்வொருவரும் குடிமகன் அல்லது குடிமகள் என்றே சட்டம் கூறுகிறது. ஆங்கிலத்தில் ‘சிட்டிசன்’என்று அழைக்கப்படும் இந்தச் சொல்லுக்கு ஜாதி, மத அடையாளங்கள் பாலின அடையாளங்கள் எதுவும் இல்லை. இதுதான் சங் பரிவாரங்களை உறுத்துகிறது.

இந்தியாவில் வாழும் எவரும் இந்துக்கள் என்ற அடையாளத்தோடு தான் வாழ வேண்டுமே தவிர, அதை மறுக்கும் ‘சிட்டிசன்’ என்ற அடையாளத்தை ஏற்க முடியாது என்பதுதான் அவர்களின் கொள்கை. இந்திய அரசியல் சட்டம் ஒவ்வொருவரையும் அடையாளப்படுத்தும் குடிமக்கள் என்ற அடையாளத்தை அகற்றிவிட்டு இந்துராஷ்டிரத்துக்கான சனாதன அடையாளங்களை நோக்கி நாட்டை நகர்த்துகிறது சங்பரிவார்.

அரசியல் சட்டம் மத சுதந்திர உரிமையை உறுதி செய்கிறது. ஆனால் அந்த சுதந்திரம் சிறுபான்மையினருக்கு இல்லை என்கிறது ஆர்.எஸ்.எஸ் அதற்காக மதமாற்ற தடைச் சட்டம் கொண்டு வருகிறார்கள். அதே போல் ‘சூத்திர–பஞ்சமர்’களுக்கான கர்ப்பகிரக பூஜை உரிமையை தடுக்கிறார்கள்; கடவுளை நெருங்கும் உரிமையில் சூத்திரர்களை விலக்கி தீண்டாமையை நிலைநாட்டுகிறார்கள். தீண்டாமை ஒரு குற்றம் என்ற அரசியல் சட்டம் கர்ப்பக்கிரகத்தில் செல்லாது என்கிறார்கள். அரசியல் சட்டத்தை விட ஆகமங்கள் உயர்வானவை என்று வாதாடுகிறார்கள்.

ஆண், பெண் பாகுபாடுகளை மறுக்கிறது அரசியல் சட்டம். ஆனால் மதத்துக்கான தனி உரிமைகளில் ஆண்,பெண் சமத்துவம் பொருந்தாது என்கிறது ஒன்றிய ஆட்சி. அய்யப்பன் கோவிலுக்குள் பெண்கள் நுழைய உச்சநீதிமன்றம் அனுமதித்தது. அனுமதி மறுப்பது மதத் தீண்டாமை என்று தீர்ப்பில் பதிவு செய்தது. ஆனால் இந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் ஒன்றிய ஆட்சி வாதாடி வருகிறது. “The constitutional mandate under Article 25(1) entitling all persons equal, did not provide for gender equality” அனைவரும் சமம் என்ற அரசியல் சட்ட உரிமை இந்து மதத்துக்கு பொருந்தாது என்பதே ஒன்றிய ஆட்சியின் கொள்கை என்று வாதிடுகிறார் அரசு வழக்கறிஞர் துஷார் மேத்தா.

குடிமக்கள் அனைவருக்கும் அரசியல் சட்டம் வழங்கும் பொது உரிமைகளை ‘இந்து’ சனாதனத்துக்கு எதிரானது என்பதால் சட்டத்தின் நோக்கத்தை திட்டமிட்டு சிதைக்கிறார்கள். குடிமக்கள் என்ற அடையாளத்தை ஏற்க மறுக்கிறார்கள். குடியுரிமைத் திருத்தச் சட்டங்கள், மதமாற்ற தடைச் சட்டங்கள், பசு பாதுகாப்புச் சட்டம், சமஸ்கிருதம் மற்றும் வந்தே மாதரம் திணிப்பு, தொண்டு நிறுவனங்களை ஒடுக்குதல் என்று அடுக்கடுக்கான திட்டங்கள் திணிக்கப்படுவதன் நோக்கம் குடிமக்களை இந்துக்களாக மாற்றுவதற்குத்தான்.

இஸ்லாம் மதத்துக்கு மாறினால் பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டுக்கு உரிமை வழங்கலாம் என்று திராவிட மாடல் ஆட்சியின் 2024–ஆம் ஆண்டு அரசாணையை மதுரை உயர்நீதிமன்ற கிளையின் நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் பி.பி.பாலாஜி அமர்வு இப்போது ரத்து செய்திருப்பதும் இதே நோக்கத்தில் தான். ஆர்.எஸ்.எஸ் தலைமையகத்தில் ‘இந்து’ என்ற அடையாளச் சான்றிதழை பெற்றால் மட்டுமே இந்தியாவில் குடி மக்களாக வாழ முடியும் என்ற ஆபத்தை நோக்கி நாடு நகர்ந்து கொண்டிருக்கிறது.

# யாத்திரையில் ‘மோட்சம்’ போன 198 பக்தர்கள்!

*உத்தரகாண்ட் மாநிலத்தில் நடப்பு பருவத்தில் சார்தாம் யாத்திரை மேற்கொண்ட பக்தர்களின் எண்ணிக்கை 37 இலட்சத்தைக் கடந்துள்ளதாம். உத்தரகாண்ட் மாநிலத்தில் கடந்த ஏப்ரல் 19–ஆம் தேதி முதல் சார்தாம் யாத்திரை தொடங்கி நடைபெற்று வருகிறது. கேதார்நாத் கோயில் ஏப்ரல் 22–ஆம் தேதியும், பத்ரிநாத் கோயில் ஏப்ரல் 23–ஆம் தேதியும் திறக்கப்பட்டன. கேதார்நாத் கோயிலுக்கு 12.61 இலட்சம் பக்தர்களும், பத்ரிநாத் கோயிலுக்கு 11.67 இலட்சம் பக்தர்களும் வருகை தந்துள்ளனர்.*

*கங்கோத்ரிக்கு 6.17 இலட்சம் பேரும், யமுனோத்ரிக்கு 5.83 இலட்சம் பேரும், ஹேம்குண்ட் சாஹிப்பிற்கு 1.05 இலட்சம் பக்தர்களும் சென்றுள்ளனர். கவுமுக் பனியாற்றுக்கு 5,795 பக்தர்கள் பயணம் மேற்கொண்டுள்ளனர். இந்தப் பருவம் தொடங்கியதில் இருந்து இதுவரை மொத்தம் 3.54 இலட்சம் வாகனங்கள் யாத்திரை பாதைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. மாநில அவசர கால செயல்பாட்டு மய்யத்தின் தரவுகளின்படி, கடந்த 17.6.2026 வரை மொத்தம் 37.35 இலட்சம் பக்தர்கள் வழிபாடு செய்துள்ளனராம்.*

*இதற்கிடையே, யாத்திரையின் போது உயிரிழந்த பக்தர்களின் எண்ணிக்கை 198 ஆக அதிகரித்துள்ளது. இதில் 195 பேர் உடல்நலக் குறைவு மற்றும் உடல்நல பாதிப்பு காரணமாகவும், 3 பேர் இயற்கை காரணங்களாலும் உயிரிழந்துள்ளனர். அதிகபட்சமாக கேதார்நாத்தில் 95 பேர் உயிரிழந்துள்ளனர். பத்ரிநாத்தில் 59 பேரும், யமுனோத்ரியில் 26 பேரும், கங்கோத்ரியில் 18 பேரும் உயிரிழந்துள்ளதாக அதிகாரப்பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.* **கடவுளை நம்பியவர்கள் கைவிடப்பட்டனர்.**

# ‘தாய்மாமன்’ திட்டம் தேவையற்றது!

*"தாய் மாமன்" தங்க மோதிரம் திட்டத்துக்காக ஆண்டு ஒன்றுக்கு தமிழ்நாடு அரசால் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ.755.83 கோடி. அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காக ஒதுக்கப்படும் இவ்வளவு பெரிய தொகையை அரசு மருத்துவக் கட்டமைப்புகளுக்காக செலவிடப்பட வேண்டும் என்பதே நமது உறுதியான கருத்து!*

*ஏற்கனவே "டாக்டர் முத்துலட்சுமி மகப்பேறு உதவி" திட்டத்தின் கீழ் நலிவுற்ற பெண்களுக்கு 14,000 ரூபாய் ரொக்கமாக நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர ரூ.4,000 மதிப்பில் சத்துணவுகளும் வழங்கப்படுகின்றன. அரசு மருத்துவமனைகளில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 4 இலட்சத்து 41 ஆயிரத்து 667 குழந்தைகள் பிறப்பதாக கணக்கிடப்படுகிறது. ஒரு கிராம் தங்கத்தின் விலை 17,000 ரூபாய். கடும் நிதிச்சுமையை உருவாக்கும் இத்திட்டம் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தையும் கேள்விக்குறியாக்குகிறது.*

*அரசு மருத்துவமனையில் ஒருவருக்கு எத்தனை குழந்தைகள் பிறந்தாலும் அவர்களுக்கு ஒரு கிராம் தங்கம் வழங்கப்படும் என்று இத்திட்டம் கூறுகிறது. தமிழ்நாடு பின்பற்றி வரும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் நோக்கத்தையே இத்திட்டம் சிதறடிக்கிறது. அரசு மகப்பேறு மருத்துவமனைகளில் உள் கட்டமைப்பு வசதிகள் மிகமோசமாக உள்ளதாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இங்கே ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் குழந்தை நலபணியாளர்களுக்கு மாத ஊதியமாக வழங்கப்படுவது ரூ.4500 மட்டுமே!*

*அரசு மருத்துவமனைகளில் தரமான மருந்துகளை வாங்குவதற்காக 1990 இல் உருவாக்கப்பட்டது தான் அரசு மருத்துவ சேவை வாரியம்; மருந்துகளுக்கு பதிலாக தங்கம் வாங்கும் வேலை இந்த வாரியத்திடம் இப்போது ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஒரு காலத்தில் வீட்டில் பிரசவம் பார்த்த நிலை இப்போது மாறிவிட்டது. 99 விழுக்காடு குழந்தைப் பிறப்புகள் மருத்துவமனைகளுக்கு வந்துவிட்டன பிறகு எந்த நோக்கத்திற்காக இத்திட்டம் வந்திருக்கிறது? தமிழக முதலமைச்சருக்கு "தாய் மாமன்" பெருமை சேர்ப்பதற்காக மட்டுமே கொண்டுவரப்பட்டுள்ள இத்திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும்!*

**– "விடுதலை இராசேந்திரன்".**

# வி.பி.சிங் பிறந்தநாள்

*சமூகநீதிக் காவலர் வி.பி. சிங் பிறகிந்தநாளையொட்டி, ஜூன் 25, 2026 காலை 10 மணிக்கு, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில், சென்னை பிரசிடென்ஸி கல்லூரி வளாகத்தில் உள்ள வி.பி. சிங் சிலைக்கு மாலை அணிவித்து, தோழர்கள் கொள்கை முழக்கமிட்டனர். நிகழ்வில், சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கத்தின் தலைவர் ரங்கநாதன், மாவட்டத் தலைவர்கள் சேத்துப்பட்டு இராசேந்திரன், மா. வேழவேந்தன், மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன், திருவல்லிக்கேணி பகுதித் தலைவர் சு. கோபிநாத், பகுதி அமைப்பாளர் எம்.ஜி.ஆர் நகர் துரைராசு, முழக்கம் உமாபதி, ராஜன், விஜயன், தோழர்கள் ஏசுகுமார், மயிலை மனோகர், சு.பிரகாஷ், பாரி சிவா, சிகாமணி, அசோக், வீரா, லட்சுமணன் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.*



**முதல் பக்க தொடர்ச்சி..**

*தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் சட்டத்தை நிலைநாட்ட வேண்டிய காவல்துறையே அரசு ஆணையை மீறி, மூடநம்பிக்கையை ஊக்குவிக்கும் வகையில் விலங்கு பலியிட்டு மாந்திரீக பூஜை செய்திருப்பது.*

*1. அரசியலமைப்பின் மதச்சார்பின்மை கோட்பாட்டிற்கு எதிரானது.*

*2. காவல்துறை நடத்தை விதிகள் மீறல்.*

*3. பொதுமக்கள் மத்தியில் காவல்துறை மீதான நம்பிக்கையை சீர்குலைக்கும் செயல் என்பதனை தோழமையுடன் சுட்டிக்காட்டியும், கண்டித்தும் தீவட்டிப்பட்டி காவல் நிலையத்தில் நேரில் புகார் அளிக்கப்பட்டது. புகார் அளித்த அடுத்த சில நாட்களிலேயே சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், சேலம் மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர் பிரபாகரன், நங்கவள்ளி நகரச் செயலாளர் சந்திரசேகர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சிவசண்முகம், வனவாசி நகரச் செயலாளர் உமாசங்கர் ஆகியோர் உடனிருந்தனர்.*



# நவீன பொருளாரதாத்தில் ஜாதியின் புதிய வடிவங்கள்

***இந்தியாவில் பார்ப்பனர்களும் உயர் ஜாதியினரும் பாகுபாடுகளைக் கொண்ட சமூகத்தில் மிகவும் சொகுசான வாழ்க்கைக்கு பழகிவிட்டனர். அவர்கள் தாராளமயம் என்ற ஏற்றத்தாழ்வு கொள்கையை நியாயப்படுத்த ஜாதிகள் தானாகவே மறைந்துவிடும் என்று பேசி வருகிறார்கள் என்கிறார் இந்தியாவின் தலை சிறந்த சமூகவியல் ஆய்வாளர், பேராசிரியர் சுரிந்தர் ஜோத்கா. இவர் புதுடெல்லியில் ஜவஹர்கலால் நேரு பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியாற்றுகிறார். உலகமயமாக்கல் கொள்கை வந்த பிறகு ஜாதி மீண்டும் புதிய வடிவம் எடுத்துள்ளது என்பதை அவர் ஒரு பேட்டியில் விளக்குகிறார். அவரது பேட்டியில் இருந்து சில பகுதிகள்.***



***கேள்வி: இந்தியாவின் நவதாராளவாத பொருளாதார சூழலில் ஜாதி எவ்வாறு வெளிப்பட்டுள்ளது?***

இது முக்கிய விவாதம். எல்லாமே மாறுகின்றன; ஜாதியும் அதற்கு விதிவிலக்கல்ல. ஜாதி என்பது நிலையான ஒன்றல்ல. அது மனித உறவுகளை ஒழுங்குபடுத்தும் ஒரு சமூக நடைமுறை. ஜாதியை ஒரு உறவாகப் புரிந்துகொண்டால், அது படிநிலை, சமத்துவமின்மை, ஒதுக்கல், மறுப்பு மற்றும் பாகுபாடு ஆகியவற்றோடு தொடர்புடையது. மனித வாழ்வின் பொருளாதார, அரசியல், புவியியல் அமைப்புகள் மாறுவது போலவே, ஜாதியும் காலப்போக்கில் மாற்றத்துக்கு உள்ளாகிறது. இந்தியா ஒரு தேசமாகவும் ஜனநாயக அரசியலமைப்பாகவும் மாறியபோது கிட்டத்தட்ட அனைத்தும் மாறத் தொடங்கின. அனைவரும் சம தகுதியை விரும்பத் தொடங்கினர்; அதையே நாம் குடியுரிமை (Citizenship) என்று அழைக்கிறோம்.

குடியுரிமை என்பது ஒவ்வொரு தனிநபரும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்ற அடிப்படைக் கருத்தை முன்வைக்கிறது. இந்த அரசியல் மாற்றம் மக்களிடம் மிகுந்த எதிர்பார்ப்புகளை உருவாக்கியது. அதே நேரத்தில், இந்தியா வறுமையும் கடுமையான சமத்துவமின்மையும் கொண்ட சமூகமாக இருந்ததால், அரசு வளர்ச்சித் திட்டங்களை முன்னெடுத்தது. உதாரணமாக இடஒதுக்கீடு (Reservtion). இத்தகைய கொள்கைகள் மக்களுக்கு சமூக முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை உருவாக்கின.

**உண்மையில் சந்தைப் பொருளாதாரம் வளரும்போது, ஏற்கனவே சமூகத்தில் அதிகம் வாய்ப்புகளைப் பெற்றிருந்த சில உயர்ஜாதி சமூகக் குழுக்கள்தான் தொடர்ந்து அதே சலுகைகளை அனுபவிக்கின்றன.**

பின்னர், 1990-களில் இந்தியா பொருளாதார தாராளமயமாக்கல் கொள்கையை ஏற்றது. அதற்குப்பிறகு மதமும் பார்ப்பனியமும் உருவாக்கிய ஜாதி என்ற கண்ணோட்டத்தில் மாற்றம் வந்தது. குடிமக்கள் என்ற பார்வையில் பார்ப்பனிய மத அடையாளங்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டன. குடிமக்கள் என்ற அறிவியல் மொழிப் பார்வை உருவானது. ‘பிராமணர், சூத்திரர், பஞ்சமர்’ என்ற அடையாளங்கள் பட்டியல் இனப் பிரிவு, பிற்படுத்தப்பட்டோர் பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டனர்.

குறிப்பாக இந்திய சமூகத்தின் விளிம்புநிலைகளில் வரலாற்று ரீதியாக வாழ்ந்த பட்டியல் ஜாதியினர் (SC), பட்டியல் பழங்குடியினர் (ST) மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் (OBC) கீழ்த்தட்டு பிரிவினர் தாங்கள் அதிகாரம் மற்றும் சலுகை நிறைந்த பதவிகளில் புறக்கணிக்கப்படுவதை உணரத் தொடங்கினர். அவர்களுக்கு அரசியல் கட்சிகளில் பிரதிநிதித்துவம் கிடைத்திருக்கலாம். ஆனால் அரசு நிர்வாகம், நீதித்துறை மற்றும் முக்கிய அரசு நிறுவனங்களில் நுழைவது கடினமாகவே இருந்தது. வளர்ந்து வரும் பொருளாதாரத்திலும் அவர்கள் புறக்கணிக்கப்பட்டிருந்தனர். அப்போது அவர்கள் “இந்தப் புறக்கணிப்புக்கு ஜாதி ஒரு காரணமாகவே இருக்கிறது” என்பதை உணர்ந்தனர். இதனால் ஒரு முரண்பாடான நிலை உருவானது. ஜாதியால் அதிகம் பாதிக்கப்படுபவர்களே தங்கள் உரிமைக்காக ஜாதியை பேசும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஏனெனில் புதிய பொருளாதார அமைப்பிலும் ஜாதி அவர்களை விளிம்புநிலையிலேயே வைத்திருக்கிறது.

***கேள்வி: 1990-களுக்குப் பிறகு ஜாதி அமைப்பு தனது வடிவத்தை மாற்றிக்கொண்டது போலத் தெரிகிறது. இன்றைய சந்தைப் பொருளாதாரத்தில் ஜாதி எவ்வாறு செயல்படுகிறது?***

***சுரிந்தர் ஜோத்கா:*** இதனை இரண்டு வழிகளில் பார்க்கலாம். நேரு காலத்தில் இந்திய நடுத்தர வர்க்கம் ஜாதியை மதம் சார்ந்த பாரம்பரிய படிநிலை அமைப்பாக மட்டுமே பார்த்தது. இந்தியா தொழில்மயமாக்கப்பட்டு நகரமயமாக்கப்பட்டால் ஜாதி தானாகவே மறைந்துவிடும் என்று அவர்கள் நம்பினர். கிராமத்தில் வாழும்போது மட்டுமே ஜாதி நம்மை ஆளுகிறது; நகரத்திற்கு வந்துவிட்டால் அது மறைந்துவிடும் என்று கருதினர். ஏனெனில் நகரத்தில் அண்டை வீட்டுக்காரர் யார்?, உணவை யார் சமைத்தார்கள்?, குடிநீர் எங்கிருந்து வருகிறது? என்பதைக் கூட நாம் அறியமாட்டோம்.
மேலும் ஜாதி என்பது இந்தியாவுக்கே உரிய ஒரு பிரச்சினை என்று அவர்கள் நினைத்தனர்.

ஆனால் உலகின் பிற பகுதிகளிலும் இதேபோன்ற படிநிலை மற்றும் ஒதுக்கல் அமைப்புகள் உள்ளன. உதாரணமாக அமெரிக்காவில் இனவெறி (Race). இன்னும் தொடர்கிறது. உலகமயமாக்கல் கொள்கைக்குப் பிறகு ஜாதி மேலும் ஆழமாக ஊடுருவியுள்ளது என்பதே உண்மை. அது தானாக மறைந்துவிடவில்லை.உதாரணமாக, நில உடைமை அமைப்புகள் ஜாதியுடன் பிணைந்துள்ளன. பிரிட்டிஷ் காலத்தில் கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு இடம்பெயர்ந்து ஆங்கிலக் கல்வி பெற்றவர்கள். பார்ப்பன உயர் ஜாதியினரே அதிகாரம் நிறைந்த பதவிகளை கைப்பற்றினர்.

பார்ப்பன உயர்ஜாதியினரின் மிகப்பெரிய சொத்து கல்வியும் ஆங்கிலப் புலமையும் ஆகும். இவை இன்றும் உலகளாவிய சந்தைப் பொருளாதாரத்தில் வெற்றி பெற முக்கியமான கலாச்சார மூலதனங்களாக இருக்கின்றன. தனிநபர் திறமையாக பேசப்படுவது அதிகாரம் நிறைந்த உயர்ஜாதி குடும்பம் மற்றும் உறவினர்களின் வழியாகக் கிடைக்கும் வாய்ப்புகளாகும். நகர்ப்புற குடிசைப்பகுதிகளில் வளர்ந்தவர்கள் அல்லது புதிதாக நகரத்துக்கு இடம் பெயர்ந்தவர்கள் இத்தகைய கலாச்சார மூலதனத்தை எளிதில் பெற முடியாது.

இதனால் புதிய சமத்துவமின்மை உருவாகிறது. அதனால் ஜாதி என்பது வெறும் பாரம்பரிய அடையாள அமைப்பு அல்ல. அது இனஒதுக்கலையும் பாகுபாட்டையும் உருவாக்கும் ஒரு அமைப்பாகவே உள்ளது. எனவே ஜாதியை அரசியல் ரீதியாகவும், கொள்கை ரீதியாகவும், தார்மீக ரீதியாகவும் எதிர்கொள்ள வேண்டும்.

***கேள்வி: இன்று சமூகத்தில் ஜாதி பெரிய பங்கு வகிப்பதில்லை, உண்மையில் மக்களின் வாழ்க்கை வாய்ப்புகளை நிர்ணயிப்பது வர்க்கம் (Class) தான் என்று ஒரு கருத்து நிலவுகிறது. மேலும் இந்திய நடுத்தர வர்க்கத்தின் ஒரு பகுதி தங்களை “ஜாதியற்றவர்கள்” (Casteless) என்று அடையாளப்படுத்திக் கொள்கிறது. “நான் ஜாதியை நம்புவதில்லை” என்று கூறுபவர்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?***

***சுரிந்தர் ஜோத்கா:*** கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் உலகளவில் சமூகத்தைப் பற்றிய அறிவு எவ்வாறு உருவாகியுள்ளது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். சமூகவியல் மற்றும் பொருளாதாரப் பாடநூல்களில் காணப்படும் கோட்பாடுகள், ஜாதியை ஒரு பாரம்பரிய அமைப்பாகவும், இந்தியாவை ஒரு பாரம்பரிய சமூகமாகவும் சித்தரிக்கின்றன. பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் மூலமாக இந்தியாவில் நவீனத்துவம் வந்தது, இன்னும் முழுமையான நவீன சமூகமாக மாற வேண்டிய தூரம் உள்ளது.

உண்மையில் சந்தைப் பொருளாதாரம் வளரும்போது, ஏற்கனவே சமூகத்தில் அதிகம் வாய்ப்புகளைப் பெற்றிருந்த சில உயர்ஜாதி சமூகக் குழுக்கள்தான் தொடர்ந்து அதே சலுகைகளை அனுபவிக்கின்றன. மேற்கத்திய நாடுகளிலும் இதே நிலைதான் ; அங்கே ஏற்கனவே செல்வாக்கு பெற்றிருந்தவர்களே தாராளமயக் கொள்கையில் மேலும் பயனடைகிறார்கள். உழைப்பு மற்றும் கல்வி இருந்தால் மட்டும் போதும் சமூகம் தானாகவே முன்னேறி விடும் என்று கூறுவதை ஏற்க முடியாது. நவீனத்துவமும் முதலாளித்துவமும் உருவாக்கிய கற்பனைக் கட்டுகதை இது; ஏற்கனேவே உயர்ஜாதிப் பின்புலம் கொண்டவர்கள் மட்டுமே முன்னேற முடிகிறது.

அமெரிக்காவில் இனவெறியை எடுத்துக்கொள்ளுங்கள். அது வெறும் தோல், நிறம் அல்லது தோற்றம் சார்ந்த பிரச்சினை அல்ல. அது அமெரிக்க பொருளாதாரத்திலும் சமூக அமைப்பிலும் ஆழமாகப் பதிந்துள்ளது. அதேபோல் இந்தியாவில் ஜாதிக்கும் தனித்துவமான அம்சங்கள் உள்ளன. அவற்றை உள்ளூர் ஜாதிச் சூழல்களில் புரிந்துகொண்டு எதிர்கொள்ள வேண்டும். “வர்க்கம் மட்டுமே முக்கியம்”, “நாம் ஜாதியற்றவர்கள்” என்று பேசிக் கடந்துவிட முடியாது. ஜாதியின் புதிய வடிவத்தை புரிந்து கொண்டு அதற்கு எதிராகப் போராட வேண்டும்.

அரசியல், சமூகம் அதிகாரம் வழியாக ஜாதி புதிய ‘அவதாரம்’ எடுத்துள்ளது. தனியார் பள்ளிகளில் உயர்ஜாதி சமூக செல்வாக்கு உடைய குழந்தைகளும் அரசுப் பள்ளிகளில் ஒடுக்கப்பட்ட வசதி வாய்ப்பற்ற குழந்தைகளும் படிக்கும் நிலையே நீடிக்கிறது. இதன் வழியாகவும் குழந்தைகள் ஜாதி கடந்து பழகும் நிலை தடுக்கப்படுகிறது. இத்தகைய பள்ளி, கல்வி அமைப்பும் ஜாதியை பாதுகாத்துக் கொண்டிருக்கிறது.

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# கள்ளக்குறிச்சியில் நீட் தேர்வுக்கு எதிரான ஒரு நாள் பரப்புரை!



கள்ளக்குறிச்சி மாவட்டக் கழகத்தின் சார்பில், 20-06-2026 சனிக்கிழமை அன்று கிராமப்புற மாணவர்களைப் பாதிக்கும் மருத்துவக் கனவைச் சிதைக்கும் ‘நீட்’ தேர்வை இரத்து செய்யக் கோரி ஒன்றிய அரசை வலியுறுத்தி ஒரு நாள் பரப்புரைப் பயணம் தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் கு.பாபா தலைமையில் நடைபெற்றது.

காலை 10 மணி மூங்கில்துறைப்பட்டு, காலை 12 மணி மேல் சிறுவள்ளூர் கூட்டு சாலை, மாலை 3 மணி வாணாபுரம் கூட்டுச்சாலை, மாலை 6 மணிக்கு கடுவனூர் பேருந்து நிலைத்தியலும் நடைபெற்றது. இதில் தலைமைக்குழு உறுப்பினர் ந.அய்யனார், மாவட்டச் செயலாளர் க.ராமர், மாவட்டத் தலைவர் க.மதியழகன், விழுப்புரம் மாவட்டத் தலைவர் பூ.அ.இளையரசன் திமுக கல்லக்குறிச்சி மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் விசய் ஆனந்து மற்றும் சி.பி.அய்யை சார்ந்த சையத் கரீம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்வில் மு.நாகராஜ், ரிஷிவந்திய ஒன்றிய அமைப்பாளர் இரா. கார்மேகம், வீ.முருகன், ரிஷிவந்திய ஒன்றியத் தலைவர் மா.குமார், கி.ஆனந்தன் ஏ.ஜெயப்பிரகாஷ் சு.வல்லரசு, இரா.ஜீவா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கரூரில் ஈழப் படைப்பாளிகளின் நூல்கள் அறிமுகம்

தமிழ் உணர்வாளர்கள் கூட்டமைப்பின் சார்பாக தியாகி "பொன் சிவகுமரனின்" 52 -ஆவது ஆண்டு நினைவுகளோடு மறுக்கப்படும் உரிமைகள், மறைக்கப்பட்ட வரலாறுகளைப் பேசும் 11 நூல்கள் அறிமுக விழா 27.06.2026 சனிக்கிழமை அன்று மாலை 5.00 மணி அளவில் கரூர், அய்யப்பா சேவா சங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சண்முகம் (சாமானிய மக்கள் கட்சி ) அவர்கள் தலைமை வகித்தார். முகிலன் (சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம் - காவிரி ஆறு பாதுகாப்பு இயக்கம்) அவர்கள் முன்னிலை வகித்தார். ஆ. பாண்டியன் (சுயமரியாதை சமத்துவக் கழகம்) அவர்கள் வரவேற்புரையாற்றினார்.




நிவேதா சத்யாராஜ், முனைவர் சாலினி (பேராசிரியர், ஆய்வாளர்), முனைவர் ப. கிருட்டிணவேணி (முதுகலை அறிவியல் யோகா மற்றும் இயற்கை மருத்துவம்) ஆகியோர் நூல்களைப் பற்றி கருத்துரையாற்றினர். புதுச்சேரி மாநில திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் லோகு. அய்யப்பன் நூல்களைப் பற்றி மதிப்புரையாற்றினார்.

"கஸ்தூரியின் ஆக்கங்கள், வானதியின் கவிதைகள், மேஜர் பாரதி எழுதிய காதோடு சொல்லிவிடு, தமிழீழ தியாகச்சுடர் அன்னைபூபதி, கனவுக்கு வெளியேயான உலகு, தமிழீழ பெண்களின் சிறுகதைகள் ’வழி’, வேர்கள் துளிர்க்கும், பெண்களும் புரட்சியும், மார்ச் 8 அனைத்துலகப் பெண்கள் நாள், கட்டுநாயக்கா தாக்குதல் வெற்றி, அறிவரண் தளபதி பொட்டுஅம்மான் தளபதியின் வாழ்க்கை வரலாறு " ஆகிய நூல்களை கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிமுகம் செய்து பேசுகையில் ஈழ வரலாற்றில் பெண் புலிகள் வியப்பூட்டிய செய்திகளைப் பற்றியும், ஈழத்தில் குறுகிய காலத்தில் குறைந்த இளைஞர்களை வைத்து தொழிற்கல்வி, நீதிமன்றங்கள், போக்குவரத்து, மருத்துவம், சட்டங்கள், சுற்றுசூழல் போன்ற ஒரு நாட்டிற்கு தேவையான அனைத்து துறைகளை உருவாக்கி அங்கிருந்த மக்களிடம் எடுத்துச் சொல்லி, திரட்டி போராட முடிகிறது என்றால் குறைந்தது வீரியமிகு போராட்டத்திற்கு நம்மால் ஏன் அணி திரட்ட முடியாது என்ற சிந்தனை இந்த நூல்களும் இந்நிகழ்சிகளும் நமக்கு வழங்கட்டும் என்று சிறப்புரையாற்றினார்.

அருண் தங்கவேல் (மருத்துவர்) , ஜெகநாதன் (வழக்குரைஞர்), ஜீவா சங்கிலி, அக்பர் (தொழிலதிபர்), (இயற்கை வேளாண்மையாளர்), செங்குட்டுவன், விஜயன் (சமூக செயற்பாட்டாளர்), பழ. ஆனந்த் (வழக்கறிஞர்), டேவிட் (சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர்) , மலைக்கொழுந்து (ஆசிரியர் ), மில்லர் மெய்யழகன், காமராஜ் ஆகியோர் நூல்களைப் பெற்றுக்கொண்டனர்.

அன்பு எழிலன் (புதுச்சேரி மாநில திராவிடர் விடுதலைக் கழக இளைஞரணி தலைவர்), வேல் அழகன், எத்திராஜ், ராமகிருஷ்ணன் புதுச்சேரி மாநில கழகத் தோழர்களும், கரூர் மாவட்டக் கழக முன்னனி தோழர்கள் மோகன்தாஸ், இரா. காமராசு, (சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர்) டேவிட், கிருஷ்ணன் (ஈரோடு மாவட்ட துணைத் தலைவர்), பிரபு (ஈரோடு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்), நாகராஜ் (தமிழ்நாடு மாணவர் கழக சேலம் மாவட்ட அமைப்பாளர்), ரஞ்சித், ஆசிரியர் சதீஸ்குமார், கார்த்தி ஆகிய கழகத் தோழர்கள் மற்றும் தோழமை இயக்கத் தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கேத்ரின்-இலக்கியன் மதம் கடந்த மணவிழா!



திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் ஒன்றியத் தலைவர் சிவானந்தம் - சங்கீதா இணையரின் மகன் இலக்கியன் அவர்களுக்கும், கேரளா மாநிலம், திருச்சூர் ஜோ. மனோஜ்- ம. மினி இணையரின் மகள் கேத்ரின் ஆகியோருக்கும் வாழ்க்கைத் துணை ஏற்பு விழா 28.06.2026 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 11.00 மணி அளவில் , தாராபுரம் லயன்ஸ் மஹாலில் நடைபெற்றது. திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் இராசு நிகழ்ச்சியை நெறியாளுகை செய்தார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி மணமக்களுக்கு வாழ்க்கை துணை நல ஒப்பந்தம் செய்து வைத்து மணமக்களுக்கு வாழ்த்து தெரிவித்தார். கழகப் பொதுச்செயலாளர் விடுதலை ராசேந்திரன் வாழ்த்துரையாற்றினார். கழக அமைப்புச் செயலாளர் ப. ரத்தினசாமி, தமிழ்நாடு அறிவியல் மன்றத் தவைவர் வீ. சிவகாமி ஆகியோர் மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினர்.

கழகத் தோழர் மடத்துக்குளம் சிவானந்தம் தீவிர கழகப் களப்பணியாளர். மறைந்த கழகச் செயல்வீரர் மடத்துக்குளம் மோகன் அவருடன் இணைந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக பெரும் பங்காற்றியதையும் அவரது துணைவியார் சங்கீதா கழக கொள்கையில் ஆர்வத்துடன் செயல்பட்டதையும் கழகத் தோழர்கள் வாழ்த்துரையில் சுட்டிக்காட்டினர். பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேசுகையில் “மதங்களை கடந்து சடங்குகள், தாலி இன்றி நடக்கிறது இந்த மணவிழா. இந்து திருமணச் சட்டத்திலேயே ஒரு திருத்தமாக சுயமரியாதை திருமண சட்டம் கொண்டுவரப்பட்டது. இப்போது சுயமரியாதை திருமணங்கள் மதங்களை கடந்திருக்கிறது. சுயமரியாதை திருமணத்தின் அடுத்த நீட்சி இது!

அரசியலில் மாற்றங்கள் தேவை என்று மக்கள் வாக்களித்திருக்கிறார்கள்; ஆனால் வாழ்வில் திணிக்கப்பட்ட பார்ப்பனியப் பண்பாடுகள் மாறுதல் இன்றி தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இந்த அடிமைப் பண்பாட்டிலிருந்து மாற்றம் வரவேண்டும். ஏ.அய் தொழில்நுட்பம் வேகமாகி வருகிறது. விண்வெளிப் பயணங்கள், வான மண்டலத்தில் ஆய்வுகளை நடத்துகின்றன. ஆனால் வைதீக திருமணங்களில் என்ன நடக்கிறது? பார்ப்பனர்கள் வேத மந்திரம் ஓதுவதை பார்ப்பனக் கடவுள்கள் காதால் கேட்கிறார்கள். அவர்கள் அனுமதி கிடைத்த பிறகுதான் இந்தத் திருமணம் நடக்க வேண்டும் என்று பார்ப்பனர்கள் மக்களை நம்ப வைக்கிறார்கள். செயற்கைக் கோள்களை விட செயற்கை நுண்ணறிவை விட சக்தி வாய்ந்தது சமஸ்கிருத மந்திரம் என்று பார்ப்பனியம் மக்களை ஏமாற்றி வருகிறது. குடும்பத்தில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் சுயமரியாதை உண்டு. அவர்களிடையே உயர்வு- தாழ்வு கிடையாது என்ற வாழ்வியலை அறிமுகப்படுத்தினார் பெரியார். அந்த வாழ்க்கை முறைதான் இப்போது வெற்றி பெற்று வருகிறது. மாறாக வைதீக திருமணங்களில் தான் அதிக விவாகரத்துகள் நடைபெற்று வருகின்றன. எனவே பெரியாரியல் வாழ்வு முறைதான் உண்மையான வெற்றிகரமான வாழ்க்கை முறை என்றார் விடுதலை இராசேந்திரன்.

மணமக்கள் கழக வார இதழான புரட்சிப் பெரியார் முழக்கத்துக்கு ரூ.10,000 நன்கொடை வழங்கினர். அனைவருக்கும் மிகச்சிறப்பான அசைவ உணவு பரிமாறப்பட்டது. பல்வேறு பகுதிகளிலிருந்தும் தி.க, த.பெ.தி.க தோழர்களும் மணவிழாவுக்கு வந்திருந்தனர். விழா அரங்கம் கருஞ்சட்டைக் கடலாக காட்சியளித்தது.

கழகப் பொருளாளர் சு. துரைசாமி, கழக பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், கழக ஊடகப் பொறுப்பாளர் பரிமளராஜன், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், வெளியீட்டுச் செயலாளர் இராம.இளங்கோவன், தலைமைக் குழு உறுப்பினர்கள் திருவேங்கடம், மனோகரன், பன்னீர் செல்வம், நிர்மல் குமார், கோவிந்தராஜ், உமாபதி மற்றும் திருப்பூர், கோவை, பொள்ளாச்சி, மடத்துக்குளம் ஆகிய பகுதிகளில் இருந்து கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**- நமது செய்தியாளர்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : July 02, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran